**DEPOSITION OF WITNESS**
**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**
Case No.CC.72/2022
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : நாகராஜன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of May 2023.

<u>10.05.2023</u>

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).
சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். 2021ம் வருடம் 5ம் மாதம் தேதி நினைவில் இல்லை. செல்வராஜ்க்கும் சுரேஷ்க்கும் இடையே நடந்த சண்டை தொடர்பாக முதுகுளத்தூர் காவல்நிலைய போலிசார் வந்து விசாரித்து படம் வரைந்தார்கள். அதில் என்னிடமும், பாலசுப்பிரமணியனிடமும் சாட்சியாக இருக்க சொல்லி கையொப்பம் கேட்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் சம்பவத்தை பற்றி எழுதியிருந்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும்போது எத்தனை நபர்கள் உடன்இருந்தார்கள் என்றால் நான், பாலசுப்பிரமணியன், செல்வராஜ் இருந்தோம். செல்வராஜ் என்பவர் தான் சுரேஷ் மீது வழக்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். செல்வராஜ் கூறி தான் நான் கையொப்பம்

செய்தேன் என்றால் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு செல்வராஜ்க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.